Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை-22 | 05-02-2004 | வியாழக்கிழமை | ஓசை-352




# சிறிலங்காவின் சுதந்திர தினமான நேற்று தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை பாதிப்பு!

## கறுப்புப் பட்டியணிந்து துக்கதினமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் 56ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட கறுப்பு நாள் நிகழ்வுகளினால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட வெகுசன அமைப்புக்களால் விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையையடுத்து குடாநாட்டின் இயல்புநிலை முற்றாக நேற்று ஸ்தம்தமடைந்தது.

வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளும் முற்றாக முடங்கிப் போயிருந்தன. வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் ஒருசில மட்டுமே சேவையிலீடுபட்டிருந்தபோதும் தனியார் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை.

யாழ்.இல் பல்கலைக்கழக நுழைவாயிலில் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்ததுடன், மரண வீடுகள் பாணியில் வாழைகள் கட்டப்பட்டு தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்துடன பிரதான கொடிக்கம்பத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டிருந்ததுடன், சோககீதமும் ஒலிக்கவிடப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்தால் நேற்றைய தினத்தை ஹர்த்தால் தினமாக அனுஷ்டிக்குமாறு விடுத்திருந்த அழைப்பையடுத்து மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை. இதனால் சந்தைகளில் மீன் விற்பனை நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

இதனிடையே முக்கிய வீதிகள் மற்றும் சந்திப்பகுதிகளில் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு என்றுமில்லாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## - போர் நிறுத்த உடன்பாட்டுடன் தொடர்பான -

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரங்களை பிரதமரிடம் கையளிக்க சிபார்சு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் நிறுத்த உடன்பாட்டுடன் தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்கள் பிரதமரிடம் கையளிக்கப்பட்டால் அது நாட்டில் இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படக் கூடிய நிலையை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

மலிக் சமரவிக்கிரமசிங்க, மனோ தித்தவெல குழுவின் பேச்சுவார்த்தை அடிப்படையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே மேற்படி தீர்மானம் தொடர்பாக யோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான முடிவு எதிர்வரும் 9ஆம் திகதி வெளிவரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜப்பானிய

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கக் கொடிகளைக் காணவில்லை கச்சாய்ப் பகுதியில் படையினர் தேடுதல்

சாவகச்சேரி-கச்சாய் வீதிப் பகுதியில் படையினரால் வீதியோரங்களில் கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடிகள் சில இனந்தெரியாத சிலரால் நேற்றுப் பிற்பகல் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு நவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான படையினர் வீதியோரங்களில் உள்ள பொது மக்களது வீடுகளில் தேடுதல் நடத்தியுள்ளனர். அத்துடன் இச்சம்பவத்தின் தொடர்ச்சியாக அண்மையில் கச்சாய் புனித விகோசியார் தேவாலயப் பகுதியில் திறந்து விடப்பட்ட வீதியொன்று மீண்டும் மூடப்பட்டுள்ளது.

## - வலி. வடக்கு இடம் பெயர்ந்த மக்கள் -

## சொந்த நிலத்தில் குடியேற அனுமதிக்குமாறு கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

வலிகாமம் வடக்கின் அதிஉயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று முதல் ஆரம்பித்துள்ள சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டத்தால் வலி. வடக்குப்பிரதேச செயலகத்தின் பணிகள் நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

நேற்றுக்காலை 8 மணிமுதல் தெல்லிப் பளையிலுள்ள வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்பாக குவித்த நூற்றுக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் பிரதான வாயில்களை வழிமறித்து மறியல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு குறித்த பிரதேச செயலக வளாவினுள் சிங்கக்கொடியை ஏற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியில் முடிவுற்றன.

படை அதிகாரிகள் மற்றும் பொலிசார் அங்கு நேரில

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கக் கொடியை அறுத்த வானும் சாரதியும் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினமான நேற்று இராணுவத்தினரால் கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடி தாழ்வாகப் பறந்ததால் அவ்வீதியால் சென்ற வாகனம் கொடிகளை அறுத்துச் சென்றுள்ளது. இதனையடுத்து படையினர் வாகனத்தை வழிமறித்து சாரதியை தாக்கியதுடன் வாகனத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் படையினரால் கைதாகி காணாமற்போனோரின்

## பாதுகாவலர் சங்க மறியல் போராட்டத்தை கைவிடுமாறு சிறிலங்காப் படையினர் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினரும் இணைந்து நடாத்திய மறியல் போராட்டத்தைக் குழப்பியடிக்கும் முயற்சியில் சிறிலங்கா பொலிசாரும் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன தம் உறவுகளின் நிலை பற்றி அறிவதற்கு உதவுமாறு கோரி மறியல் போராட்டம் ஒன்றை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக நடத்துவதற்கு இவ்விரு அமைப்பினரும் ஏற்பாடு செய்திருந்தனர்.

திட்டமிட்டபடி சிறிலங்காவின் தேசிய தினமான நேற்று இப் போராட்டத்தை நடத்துவதற்கு இவர்கள் அங்கு கூடியவேளை, அவர்களை படையினர் விரட்டியடித்ததுடன் காணாமற் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் சற்குணத்தை கைது செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று சேவையிலீடுபட முற்பட்ட போ. சபை பேருந்து தாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று யாழ். நகரில் இனந் தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

யாழ். கொட்டடிச் சந்திக்கு அண்மையாக நடைபெற்ற இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். நகர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து அகாஷி - ஆர்மிரேஜ் பேச்சு

(கொழும்பு)

ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசிஅகாஷி, அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சட் ஆமிர்ரேஜ்ஜை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு டோக்கியோவில் உள்ள அமெரிக்க தூதுரகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் சமாதான நடவடிக்கைகுறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

அரசியல் முறுகலால் சமாதான நடவடிக்கைகள் முடங்கிப் போயுள்ளமை தொடர்பாகவும் இருவரும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். இதேவேளை எதிர்வரும் 17ஆம்திகதி இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாஷிங்டனில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டில் நடைபெறும் கூட்டத்தில் பேசுவது என்றும் இருவரும் இணங்கிக்கொண்டனர்.

அத்துடன் சிறிலங்காவின் பிரதான கட்சிகள் தமக்கிடையிலான முறுகலை தீர்த்துக்கொள்வதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்களை நகர்த்திச்செல்ல முடியும் என்பதுடன் நாட்டினை அபிவிருத்தி செய்ய முடியும் என இருவரும் நம்பிக்கை வெளியிட்டனர்.

இந்தத் தகவலை இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரகம் நேற்று மாலை வெளியிட்டுள்ளது. (32)

## யாழ். கச்சேரிப் பகுதியில் காரில் வந்தவர்களால் யுவதி கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதி வீதியால் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவர் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் மதியம் கச்சேரி நல்லூர் வீதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சைக்கிள் ஒன்றில் வந்து கொண்டிருந்த யுவதியை கார் ஒன்றில் வந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்துவதற்காக வந்த காரில் நான்கு பேர்வரை இருந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட அப்பகுதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நிசாந் சோதிலிங்கம் எனும் பெயருடைய அ.அட்டையும், பயண அனுமதி அட்டையும் உள்ளடங்கிய (பேஸ்) முல்லைத்தீவுக்கும் முள்ளியவளைக்கும் இடையில் 30-01-2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு கச்சேரியிலோ அல்லது புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையிலோ ஒப்படைக்கவும். (3976)


# உதவுத்தொகையைப் பெறும் மாணவர்களுக்கு சீருடை

(அலுவலக செய்தியாளர்)

கிராமிய பொருளாதார அபிவிருத்தி வங்கியும், கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்விக்கென மாதாந்த ஊக்குவிப்பு தொகையினைப் பெறும் மாணவர்களுக்கு நேற்று சீருடைகள் வழங்கப்பெற்றன.

மேற்படி நிகழ்வு நேற்று மாவட்ட இணைப்பாளர் கருணா தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இராணிமைந்தன், கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் கஜன் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர்.

கிளி. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனப் பொறுப்பாளர் செந்தில் சீருடை வழங்கி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கிராமிய வங்கி மேலாளர் கௌளி சங்கர், வங்கியைச் சேர்ந்த வேல்விழி வங்கியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோழ)


## மாரட்டி வாழ்த்துகின்றோம்



ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று எமது மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று முன்னணியில் திகழும் மு.வற்றாப்பளை ம.வி. மாணவி யோரின்பராசா சோபியா அவர்களை நெஞ்சம் நிறைந்த மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
மு/வற்றாப்பளை ம.வி

(3979)

## முக்கிய அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க் காட்டப்படும் வீதிகளின் இருமருங்கிலும் உள்ள கடையுடன் இணைந்து எம்மால் அனுமதிக்கப்பட்ட கடை அளவுக்கு வெளியே வர்த்தக நோக்கோடு வர்த்தகர்களால் மேலதிக கொட்டகையமைத்து வியாபாரப் பொருட்களை பரப்பி வியாபாரம் செய்து வருவதனால், நகரத்திட்டமிடலுக்கு மிகுந்த அசௌகரியங்களையும், சபைக்கு நிர்வாகச் சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு வர்த்தகர்கள் தங்களால் அமைக்கப்பட்டுள்ள மேலதிக கொட்டகைகளையும் பொருள்களையும் 15.02.2004ஆம் திகதிக்கு முன்னதாக அகற்றி சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். தங்களால் ஒத்துழைப்பு நல்கத் தவறும் பட்சத்தில் சபையால் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

01.ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு- மாத்தளன் வீதி
02.பரந்தன்-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு வீதி

செ.தாயானந்தா,
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை,
புதுக்குடியிருப்பு.

(3980)


# நவம்.4 சம்பவம் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான கொள்கையில் ஒருமுன்னோக்கிய நகர்வு

## -சுதந்திர தின உரையில் சனாதிபதி

(கொழும்பு)

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடந்த சம்பவம் நீண்டகாலம் தொடரும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான எமது கொள்கைகளின் தொடர்ச்சியில் மற்றுமொரு அடியாகும் என சனாதிபதி தெரிவித்தார். 56 ஆவது சுதந்திர தின நிகழ்வில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் சனாதிபதி இவ்வாறு கூறினார்.

தமது நடவடிக்கைகள் எந்த வகையிலும் அரசியல் அதிகாரத்தையோ அரசியல் யாப்பு ரீதியான நெருக்கடிகளையோ குழப்புவதாக இருக்கவில்லை.ஒரு புறத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்து மறுபுறத்தில் பிரதான அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதன் மூலம் கலந்துரையாடல் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதென சனாதிபதி மேலும் தெரிவித்தார். நிலையான சமாதானத்தை அடைய வேண்டுமென்றால் நேர்மை, தேசத்திற்கான கடப்பாடு என்பவற்றுடன் சகல தனிப்பட்ட கட்சி ரீதியான செயல்களையும் புறந்தள்ளிவிட்டு முன்னேற வேண்டுமென அவர் தெரிவித்தார். கலந்துரையாடலில் நடைமுறையில் சகல தரப்புக்களும் சேர்க்கப்படவேண்டும். ஐக்கிய இலங்கைக்கு சமூகதன்மையுடன் கூடிய சனநாயக தீர்வை நோக்கி பணியாற்றவேண்டுமென சனாதிபதி வலியுறுத்தினார். போர் நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடித்து சமாதானத்துக்கான அர்ப்பணிப்பை காட்டும் விடுதலைப்புலிகளையும் சகல அரசியல் கட்சிகளையும் சனாதிபதி பாராட்டினார். தென்னிலங்கையில் அனைத்து அரசியல் கட்சிகளும் போரை நிராகரித்துள்ளனர். அரசியல் நெருக்கடிகளுக்கு ஆயுதம் தீர்வாக மாட்டாது என்பது அவர்களின் கருத்தாகும். பேச்சுவார்த்தை நல்லிணக்கம் ஆகிய பாதையில் முன்னேறிச் செல்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் விருப்பமாக இருக்கின்றன. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முன்னெப்போதும் காணாத வகையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒரு கொள்கை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் இணங்கும் போக்கு தென்படுகிறது. இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தில் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைப் பெற வேண்டுமானால் குறுகிய தனிப்பட்ட கண்ணோட்டங்களை ஒதுக்கி வைக்க பழக வேண்டுமென சனாதிபதி கேட்டுக்கொண்டார்.

பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கியதேசிய முன்னணிக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் வெற்றிகரமாக அமைந்திருக்கலாம். ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சுற்றி ஏனைய அரசியல் கட்சிகள் திரும்புவதன் மூலம் விரிவான தேசிய கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சனாதிபதி தமது உரையில் மேலும் தெரிவித்திருக்கிறார்.


## வழிகாட்டல் வகுப்பு

இம்மாதமும் அடுத்தமாதமும் நடைபெற இருக்கும் கிராம அலுவலர் ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் வழமைபோல.

காலம்:- 08.02.2004 காலை 9.00மணி கிளி.ம.வி. யில்

யாழ் / வவுனியாவின் போட்டிப்பரீட்சைகளுடன் தொடர்புடைய சிறந்த விரிவுரையாளர்களின் வழிகாட்டல்.

செயலாளர்,
"பேரிகை",
சமூக கலை இலக்கிய
பங்காளிகள் அமைப்பு.

(சி-9083)

வாடகைக்கார் உரிமையாளர் [மகிழுந்து] கழகம்
வன்னி

## பொதுச்சபைக்கூட்டம்

வாடகைக்கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 15.02.2004ஆம் நாள் ஞாயிறுகாலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவன மண்டபத்தில் நடைபெறும் உறுப்புரிமைபெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

"நன்றி"

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வசித்தல்.
- கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்.
- புதிய நிர்வாகத் தெரிவு
- நன்றியுரை.

வீ.சிதம்பரநாதன்
தலைவர்.

தகவல்:
அ.பேசிசேவியர்
செயலாளர்.

(சி-7148)

## ஒலிப்பாடல் தொகுப்புகள் வெளியீட்டுவிழா

நிதர்சனம் நிறுவனத்தின் தர்மேந்திரா கலையகத்தின் சிறப்பு வெளியீடுகளாய்

தாயகக்கலைஞர்களும் புலம்பெயர்
கலைஞர்களும் இணைந்த
இசை சங்கமமாய்...
இசைவாணர் கண்ணனின் இசையில்

**ஊர்போகும் மேகங்கள்**

கேணல்கிட்டு பீரங்கிப் படையணியினதும்
லெப் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியினதும்
பதிவுகளைத் தாங்கிய...
இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில்

**வரும்பகை திரும்பும்**

### ஒலிப்பாடல் தொகுப்புகள்

காலம் :- 06-02-2004 வெள்ளிக்கிழமை
நேரம் :- மாலை 04 மணி
இடம் :- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையகம்

தர்மேந்திரா கலையகம்,
நிதர்சனம்.

அனைவரும் வருக

(சி-8766)

# மத அடையாளங்களை வெளிப்படுத்த தடுக்கும் சட்டத்தை அமுலாக்க பிரான்ஸ் அரசு உறுதி!

## பிரேரணை பாராளுமன்றில் தாக்கல்

(பாரிஸ்)

**பிரான்ஸில் பாடசாலை மாணவர்கள் மத அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கு தடைசெய்யும் முகமாக இயற்றப்படவுள்ள சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளபோதிலும், அச்சட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என பிரான்ஸ் அரசு உறுதியாகக் கூறியுள்ளது.**

பிரான்ஸ் நாட்டில் அரச பாடசாலைகளில் கல்வியயிலும் மாணவர்கள் மதஅடையாளத்தை வெளிப்படுத்துவதைத் தடைசெய்யும் விதமாக பிரான்ஸ் அரசு சட்டம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

பிரான்ஸ் அரசு கொண்டுவரவுள்ள இந்தச் சட்டம் அதன் அயல் நாடுகளிலும்சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

இதனால்கொதிப்பு அடைந்துள்ள இஸ்லாமியர்கள் சீக்கியர்கள்போன்ற சிறுபான்மை சமூகத்தினர் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

இந்நிலையில் புதிய சட்டம் தொடர்பான பிரேரணை நேற்றுமுன்தினம் பிரான்ஸ் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது நடைபெற்ற விவாதத்தில் பேசிய பிரதமர், மத சார்பற்ற கல்வியே எதிர்காலத்தில் சுதந்திரமான சிந்தனைகளை மாணவர்களிடம் பிரதிபலிக்கும் என்று கூறியுள்ளார். இந்தவாரம் முழுவதும் இந்தச் சட்டப் பிரேரணை மீது விவாதம் நடத்தப்படவுள்ளது. அதன் பின்னர் எதிர்வரும் 10ஆம் திகதி வாக்கெடுப்பிற்கு விடப்படவுள்ளது. கடும் எதிர்ப்பிற்கும் மத்தியிலும் இந்த சட்டம் நிறை வேற்றப்படும் என பிரான்ஸ் அரசு கூறியுள்ளது.



கென்யாவில் அரசு கடுமையான வீதிப் போக்குவரத்துச் சட்டத்தை அமுல்படுத்தி பல தனியார் பேருந்துகளைப் பறிமுதல் செய்ததையடுத்து போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளநிலையில் ரயிலில்பிரயாணம் மேற்கொள்ளும் மக்கள்.

# அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் போட்டியிட சனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவு மும்முரம்!

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி தேர்தலில் ஜோர்ஜ்டபிள்யூ புஷ்ஷிற்கு எதிராக போட்டியிடும் வேட்பாளரை தெரிவு செய்ய சனநாயகக் கட்சி தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளது. இதற்காக ஒரு சிலரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

கரோலினா மாகாணத்தில் நடத்திய வாக்கெடுப்பில் செனட்டர் ஜோன் எட்வேட் வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் இவ்வாண்டின் இறுதியில் நடைபெறவுள்ளது.

ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையிலான குடியரசுக் கட்சியை தேர்தலில் வீழ்த்துவதற்காக சனநாயகக் கட்சியினர் தீவிர முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். சனாதிபதி வேட்பாளரைத் தேர்வு செய்யும் ஏற்பாடுகள் முழுவீச்சில்நடைபெற்று வருகின்றன.

மிசோரி, அரிசோனா, வடக்கு டக்கோட்டா, டெலாவர் பகுதிகளில் சனநாயகக்கட்சிநிர்வாகிக ளிடையே ஏற்கனவேநடந்ததேர்தலில் ஜோன் ஹரி என்பவர் வெற்றி பெற்றுள்ளார்.

# வைரஸ் நோய்களின் பாதிப்பை மூடிமறைக்காது வெளியிடுக!

## - 'ஆசியான்' தலைவர் வேண்டுகை

சார்ஸ் நோய் காரணமாகவும், தற்போது பறவைக் காய்ச்சல் நோயினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தென்கிழக்காசிய நாடுகள் இவ் விடயங்கள்ளை மூடிமறைக்காமல் தமக்கிடையே பேச்சுவார்த்தைகளை நடத்துவது மட்டுமன்றி மக்களுக்கு இவற்றின் அபாயம் பற்றி விளக்கி கூறவேண்டுமென ஆசியான் அமைப்பின் செயலாளர்நாயகம் தெரிவித்துள்ளார்.

இவ்வருட பறவைக்காய்ச்சல் நோயினால் 13பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 10ஆசிய நாடுகளில் இந்நோய் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இத்தகைய அபாயகரமான நோய் ஏற்படும்வேளை சகலருக்கும் இதுபற்றி அறிவித்து எச்சரிக்கை விடுவதே முக்கியமான விடயமாகுமெனத் தெரிவித்துள்ளார்.

# லிபியா மீதான பொருளாதாரத் தடையை அகற்ற அமெரிக்கா தீவிர பரிசீலனை

## விரைவில் அகலுமென அறிவிப்பு

(வாஷிங்டன்)

லிபியா மீதான பொருளாதாரத் தடை விரைவில் நீக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க வெளிவிவகார திணைக்கள பேச்சாளர் றிச்சர்ட் பௌச்சர் இதுபற்றி அறிவித்துள்ளார். பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு லிபியாவிலிருந்து வெளியேறிய ஐந்துக்கு மேற்பட்ட எண்ணெய் நிறுவனங்கள் மீண்டும் அங்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடியும். இத்தகைய நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய அழிவைத்தரும் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தை லிபியா டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க ஆயுத சோதனை அதிகாரிகள் சென்றமாதம் லிபியாவில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து 75 ஆயிரம் கிலோ எடையுள்ள அணுசக்தி தொடர்பான இரகசிய ஆவணங்கள் அமெரிக்க அதிகாரிகளினால் பொறுப்பேற்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனாவில் 31 மாநிலங்களுள் 11ல் பறவைக்காய்ச்சல் பரவியதைத் தொடர்ந்து சகல கோழிப்பண்ணைகளும் தொற்று நீக்கம் செய்யப் பணிக்கப்பட்டுள்ளன. இங்கு சந்தையொன்றில் வைக்கப்பட்டுள்ளகோழி இறைச்சியைப் பார்வையிடும் பாவனையாளர்கள்.



வாஷிங்டனிலுள்ள செனட் அலுவலக அறை யொன்றினுள் சந்தேகத்துக்கிடமான,ஒருவகை தூள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மூடிக்கிடக்கும் அலுவலகத்துக்கு அருகில் நடந்து செல்லும் அமெரிக்கப்படைவீரர்.

# நிபந்தனையுடனான பிணை வழங்கலை [illegible] வைகோ சென்னை உயர்நீதிமன்றில் மேன்முறையீடு

(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ பொடோ நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவுக்கு நேற்று முன்தினம் பிணைவழங்கிய பொடோ நீதிமன்றம் சில கடுமையான நிபந்தனைகள் விதித்திருந்தமை தெரிந்ததே. தற்போது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டு மனுவில் பிணையில் வெளிவருவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் சிலவற்றை நீக்க வேண்டும் என்றும்,சில நிபந்தனைகளை நிறுத்திவைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் வைகோ கோரியுள்ளார்.



முஸ்லிம்களின் ஹஜ் திருநாள் கொண்டாட்டத்தின் போது பாக்தாத்தில் பூங்கா ஒன்றில் சறுக்கு மரத்தில் விளையாடும் ஈராக்கியர்கள்.

# மனிதாபிமான பணிக்கு ஆதரவு

சூடானில் பதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மனிதாபிமான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக அந்நாட்டின் தீவிரவாதக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

ஜெனிவாவிலுள்ள உதவிவழங்கும் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேச்சு வார்த்தையின் போது சூடானின் மேற்கு நகரத்தில் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது பற்றி முக்கியத்துவம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதிகளில் யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்குமாறு ஐக்கியநாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## - யூதக் குடியேறிகளை அகற்றும் -

# ஷரோனின் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவு!

(டெல்அவிவ்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சிமோன்பெரஸ் உறுதியளித்துள்ளார்.

காஸா நிலப்பகுதியிலிருந்து யூதக் குடியேற்றங்களை அகற்றுவதற்கு ஷரோன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கூட்டணியிலுள்ள தோழமைக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கும் வேளை பிரதமருக்குப் பாதுகாப்பு வழங்குவது தனது கடமையாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோ அமைப்பில் இணைவு

கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த 07 நாடுகள் நேட்டோ அமைப்பில் இணையவுள்ளன. இந் நாடுகள் நேட்டோ அமைப்பில் இணைந்து கொள்வதற்காக அதில் அங்கம் வகிக்கும் ஒரு நாட்டைத்தவிர ஏனைய 18 நாடுகளும் தமது அங்கீகாரத்தை வழங்கியுள்ளன.

அமெரிக்கா அதிகாரம் செலுத்தும் இவ் அமைப்பில் மேற்படி ஏழு நாடுகளையும் இணைத்துக் கொள்ளும் நோக்கில் உச்சிமாநாடொன்று ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் அதற்கு முன்னர் இவ் ஏழுநாடுகளும் இணைந்து கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# என்று தீரும் இந்த அவலம்!

வீதிப்புனரமைப்பு நடவடிக்கைகளால் கிரவல் வீதிகளாக மாற்றம் பெற்றுவரும் வன்னிப்பகுதி பிரதான வீதிகளில் பயணிக்கும் மக்கள் இன்று பல இன்னல்களுக்கும், சுகாதார அச்சுறுத்தல்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர்.

மேற்படி வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் அதி வேகம் காரணமாக மேலெழும் கிரவல் தூசிப்படலத் தினால் அவ்வீதிகளில் பயணிக்கும் சகல தரப்பினரும் தினம் தினம் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன் வீதிக்கு அருகாமையிலுள்ள குடியிருப் பாளர்களும் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.



பல கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலிருந்து தங்களது கருமங்களைப் பெறவேண்டி துவிச்சக்கர வண்டிகளிலும், மற்றும் கால்நடையாக நகரத்தினை வந்தடைபவர்கள் கிரவல் புளுதியில் குளித்தவாறு அலங்கோலமாக காட்சியளிக் கின்றனர்.

இவ்வேளையில் மோட்டார் வாகனச் சாரதிகள் இம்மக்களின் அவல நிலையினை புரிந்தும் புரியாதவர்களாக கிரவல் வீதிகளில் அதிவேகமாக வாகனங்களை செலுத்து வதன் காரணமாக கிரவல்மண் தூசிகள் மேலெழுந்து வீதியைத் தெரியாதவாறு தூசிகள் மறைப்பதுடன் மக்கள் சுவாசிக்க முடியாது திணறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களும் இவ் அவலங்களை சந்தித்த வண்ணமே பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மக்கள் மனங்களைப் புண்படுத்தும் வகையில் இவ்வாகன ஓட்டிகளின் செயலானது தொடர்ந் தும் இம்மக்களை நிரந்தர சுவாச நோயாளர் களாக்கும் நடவடிக்கை யாகவே அமைந்து வருகின்றது.

வாகனங்களின் அதிவேகங் காரணமாக மேலெழும் தூசிகளின் தன்மையினை தற்போதும் கிரவல் வீதிகளின் இருமருங்கிலுமுள்ள மரங்களின் இலைகள், குடிசைகள் மேல் படிந்துள்ள கிரவல் தூசிகள் சான்று பகிர்கின்றது.

முன்பு தாரினால் செப்பனிடப் பட்ட வீதிகளே இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் கிரவல்,மண் மூலம் செப்பனிடப்பெற்று வருகின் றன. இதன் காரணமாகவே இந்த அவல நிலையினை மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



எனவே ஒவ்வொரு வாகன ஓட்டியும் தங்களது சுகத்தை மட்டும் பாதுகாப்பதை விடுத்து வீதியால் பயணிக்கும் மக்களின் சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் வாகனங்களைச் செலுத்த முன்வரவேண்டும்.

இந்நிலையினை மனதிற்கொள்ளாது மக்களுக்குப் பாரிய தீங்கினை விளைவிக்கக்கூடிய வகையில் செயற்பெறும் வாக ங்கள் மீது சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு மக்களை இவ் அவலத்திலிருந்து பாதுகாக்க முன்வர வேண்டும்.

மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் கிரவல் வீதி களில் பயணிக்க இவ் வாகன ஓட்டிகள் வழிசமைப்பார்களா? அல்லது வேகமாகச் சென்று மக்களை அவலங்களுக்குள் ளாக்கும் வாகன ஓட்டிகள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு இவ் அவலத்தினைப் போக்க முன்வருவார்களா? இதுவே இன்று கிரவல் வீதிகளில் பயணிக்கும் மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

இவ்விரண்டும் நடைமுறைச் சாத்தியமாகும் நிலையிலேயே மக்கள் சுகதேகிகளாகவும் அச்சமின்றியும் வீதிகளில் பயணிக்க முடியும் என்பது உண்மை.

**-கனகபுரச் சோதி**

# வடக்கு-கிழக்கில் 'கடல் வளம்' பாடத்தைப் போதிக்கும் தகைமையுள்ளோரை ஆசிரியர்களாக நியமிக்குக

## -க.துரைரெட்ணசிங்கம் எம்.பி.கோரிக்கை

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மொழி மூலம் பாடசாலை களில் ஆயிரம் ஜி.சி.ஈ.உயர்தரத் தகுதிபெற்ற ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது 'கடல் வளம்' பாடத்தைப் போதிக்கும் தகைமைபெற்ற ஆசிரியர்களையும் தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி பாராளுமன்ற உறுப்பி னர் க.துரைரெட்ணசிங்கம் மனி த்வள மேம்பாட்டுக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

'கடல் வளம்' பாடத்தைப் போதிக்கக் கூடிய தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கக்கூடிய வகையில் வர்த்தமானி அறிவித்த லில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஜி.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு இம்முறை சுமார் 800 மாணவர்கள் விண்ணப்பிக்க உள்ளனர். ஆனால், அவர்களுக் குக் 'கடல் வளம்' பாடம் போதிக் கக் கூடிய தகைமைபெற்ற ஆசி ரியர்கள் கிடையாது" என்றும் கடிதத்தில் துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்குக் கடலோரப் பிரதேசத்தில் கடற்றொழில் பிரதான தொழிலாக இருந்து வருகின்றது. கிழக்குக் கரையோரத்தில் பல மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளன. கடற்றொழில்ல விருத்தி செய்வ தற்கு அது தொடர்பான பாடநெறி தேவைப்படுகின்றது. கடல் வளம் பாடத்தைப் போதிப்பதன் மூலம் கடற்றொழில் விருத்திக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார். (25)

# தபோவன பொன்விழாவும் வைத்தியசாலை திறப்பும்

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளி யில் அமைந்திருக்கும் சிவானந்த தபோவனம் இன்று 05 ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று பொன் விழாக் கொண்டாடுகின்றது.

பொன்விழா நிகழ்வை ரிஷிகேசம் சிவானந்த ஆச்சிரமத்தின் சுவாமி நித்தியானந்தா ஆரம்பித்து வைக்கி ன்றார். நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்கு-கிழக்கு மாகாணப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச் சின் செயலாளர் எஸ்.சிவதாசன் பங்குபற்றுகின்றார்.

அன்றைய தினம் சிவானந்த முதலுதவிச் சங்கத்தினால் நிறுவப்பட்ட 20 படுக்கைகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்று சிவானந்த தபோவனத்தில் திறந்து வைக்கப்படுகிறது. சிவானந்த தபோ வனத்தில் வாழும் குழந்தைகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களின் நன்மை கருதி இவ்வைத்தியசாலை திறந்து வைக்கப்படவிருக்கின்றது. ஆரம்பப் பாடசாலை மற்றும் சிறுவர் பூங்கா ஆகியனவும் அன்று திறந்துவைக் கப்படவுள்ளன.

சுற்றுப்புறச் சூழல் நலன் கருதி அன்றைய தினம் மரக்கன்று உற்பத்தி விநியோக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (25)



பேசாலை அகதி முகாமிலிருந்து மீள்குடியமரும் பொருட்டு கிளிநொச்சியை வந்தடைந்த குடும்பங்களைப் படத்தில் காண்க.

(படம்-சோதி)

## அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பிரதேசவாழ் மக்கள் கடற்படையினரால் வழங் கப்படும் வதிவிடப் பாஸ்களைப் பெற்றிருக்க வேண்டும் எனப் படையினர் அறிவுறுத்தி வரு கின்றனர்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் இவ் வதிவிடப் பாசினைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் மாறாக அவற்றைப் பெறா தவர்கள் மீது கடும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும் எனவும் படையினர் எச்சரித்து வருகின் றனர். (33)

# புதிய நிர்வாகத் தெரிவு

கடந்த மாதம் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியால யத்தில் நடைபெற்றது.

இதில் புதிய தலைவராக சி.தர்மசீலன், செயலாளராக சி.சிறிரங்கன் ஆகியோர் உட்பட 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறையைச் சேர்ந்த கானகன், சி.சி.பாடசாலை அதிபர், கிராம அலுவலர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், விளையாட்டுத்துறை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (20)

# கால்நடைகளை சினைப்படுத்த பதிவுசெய்ய வேண்டுகோள்

(ஒட்டுசுட்டான்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண் பகுதியினரும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து செயற்படுத்தும் வேட்கையை ஒருமுகப்படுத்தி செயற்கை முறையில் சினைப் படுத்தல் சேவையினை மேற் கொள்ள வுள்ளனர்.

இச்சேவையானது எதிர்வரும் 5ம், 6ம், 7ம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும்.

எனவே இதுவரைகாலமும் சினைப்படாமல் உள்ள பசுக்களின் உரிமையாளர்கள் (பண்ணைக் காரர்கள்) 5ம் திகதிக்கு முன் காராளி செயற்கைமுறை சினைப்படுத்தல் நிலையத்திலோ அல்லது கால் நடை வைத்தியர் பணிமனையுடன் தங்கள் பெயர்களைப் பதிவு செய் யும்படி கேட்டுக்கொள்ளப்படு கின்றீர்கள். (05)

# நோயியல் நிபுணரின்றி ஆய்வுகள் செய்யமுடியா அவலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குத் தகுதிவாய்ந்த நோயியல் நிபுணர் நியமிக்கப்பட்டாததால் நோயியல் தொடர்பான ஆய்வுகளை மேற் கொள்ள முடியாதுள்ளதாக யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி பதவி நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டு வரு கின்றது. இதனால் யாழ்.மாவட்டத் தில் ஏற்படுகின்ற தொற்று நோய் கள், மற்றும் புதிய நோய்த் தாக்கங் கள் குறித்த ஆய்வுகளை சுகாதா ரத் திணைக்களத்தினால் மேற் கொள்ள முடியாது காணப்படுகிறது.

இதனால் தொற்று நோய் தொடர் பாக மக்களுக்குரிய சேவையை ஆற்ற முடிந்திருப்பதாகத் தெரி விக்கும் சுகாதாரத் திணைக்களம் இவ் வெற்றிடத்தை நிரப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளது. (33)

# பனம் தும்பு ஏற்றுமதியால் அதிகளவு வருவாய் ஈட்டல்

(யாழ்ப்பாணம்)

பனந்தும்பு ஏற்றுமதி மூலம் தனக்கு அதிகளவு வருவாய் கிடைத்திருப்பதாக பனை அபி விருத்திச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் வரவேற்புமிக்கதாகக் காணப்படும் பனந்தும்பை யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்து பல்வேறுபட்ட பொருட் தயாரிப்புகளுக்காகவும் அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் முயற்சியில் பனை அபிவிருத்தி சபை வெற்றிகண்டுள்ளது.

அதிக வருவாயைப் பெற்றுத் தரும் இப்பனந்தும்புகள் தற் பொழுது யப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன்,

இவ்வாறு ஏற்றுமதித் தும்பின் அளவை அதிகரிக்கவும் பனை அபிவிருத்தி சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (33)

# சிறுவர்களின் அறிவு வளர பெற்றோருக்கு ஒரு நற்செய்தி



'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற பழமொழிக்கமைய சிறு பிள்ளைகளுக்கு எவ்வளவோ அறிவான விடயங்களை நாம் சொல்லிக் கொடுத்த வண்ணம் தான் இருக்கின்றோம். ஆனாலும் 'வேப்ப மரத்தின் உச்சியில் நின்று பேய் ஒன்று ஆடுது' என்ற பயம் என்ற கல்வியையும் சேர்த்து கற்பிக்கின்றோம்.

சிறு வயதிலேயே இருட்டில் போகாதே, அறைக்குள்போகாதே பேய்பிடிக்கும், இருட்டைப்பார் ஒரு வெள்ளையுருவம் தெரியுது, பெரியவர்களுடன் சேராதேயாருடனும் கதைக்காதே என்ற பல பயப்படும் கருத்துக்களை சிறுவயதில் சொல்லி அவர்களின் துணிச்சலை முளையிலேயே கிள்ளி விடுகின்றோம். இதனால் சிறுவர்களும் பெரியவர்கள் சொல்வதுதான் தாரகமந்திரம் என நினைத்து அதற்கு அவர்களும் பழக்கப்பட்டு எதற்கு எடுத்தாலும் பயப்படுவார்கள். யாருடனும் முன்நின்று கதைக்கப் பயப்படுவார்கள்.

பெற்றோர்களே: உங்கள் பிள்ளைகளுக்கு நல்லதைச் சொல்லிக்கொடுங்கள், அறிவான விடயங்களைப் புகட்டுங்கள்.

சிறுவர்கள் எப்பொழுதும் அன்பான வார்த்தையையும் பாசமான அரவணைப்பையும் தான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பார்கள். அவர்களுக்கு நல்லது கெட்டது எது எது என பிரித்துப் பார்க்கத் தெரியாது. ஆகவே பெற்றோரான நீங்கள் சோறு ஊட்டும் போது தாய் மண்ணின் பற்றையும் சேர்த்து ஊட்டுங்கள், எமது தேசத்துக்காக உயிர்நீத்த மாவீரர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்புங்கள். பெற்றோர்கள் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் வேலைக் களைப்பை உங்கள் பிள்ளைகள் மீது காட்டாமல் இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள், அரிய பல கருத்துக்களை தாங்கிநிற்கும் நூல்நிலையத்திற்கு கூட்டிச் செல்லுங்கள். திகில் ஊட்டும் படங்கள், கதைகளைத் தவிர்த்து வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் கதைகளை சொல்லிக் கொடுங்கள். பயம் என்ற சொல்லுக்கு இடம் கொடுக்காமல் நாட்டின் நல்ல பிள்ளைகள் ஆக்குங்கள்.

21ஆம் நூற்றாண்டை அடைந்து விட்டோம் கணினி, இன்ரநெற் என பல வகையான சாதனங்கள் இன்று வந்துள்ளன. சிறு வயதாயினும் அதனை அவர்கள் கற்க அனுப்புங்கள். இதனைக் கற்கவசதி இல்லாதவர்கள் மூளை வளர்ச்சி அடைய சில பொருட்களை பகுதி பகுதியாக பிரித்து அதனை பொருத்திக் காட்டுமாறு சொல்லுங்கள். இதனால் அறிவும் வளருவதுடன் இது போன்ற சாதனங்களை நாமும் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணம் அவர்கள் மனதில் துளிர்விடும்.

மேலும் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்ற பேதமின்றி அனைவரையும் ஒரே செயல்களில் செயற்பட விடுங்கள். உதாரணத்துக்கு, எமது தமிழீழத்தில் களத்தில் போராடுபவர்களை எடுத்து நோக்குவோமாக இருந்தால் ஆண்,பெண் என்ற பேதமின்றி சமமாகப் போராடி வெற்றியும் காண்கின்றார்கள். ஆனபடியால் ஆணுக்கொரு செயல் பெண்ணுக்கொரு செயல் என பிரித்துக் கொடுக்காமல் இருவரையும் இணைத்து செயற்பட அனுமதியுங்கள். இதனால்அவர்களுக்குத்தாழ்வு மனப்பான்மை உருவா காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

எனவே உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு நீங்களே முன்நின்று அவர்களை நல்ல பாதையில் செல்லத் துணை நில்லுங்கள்.

**இ.சுகந்தினி**

---

# தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் 2003-ல் 1,79,647 பேரிற்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த 2003ம் ஆண்டு 179,647 பேரிற்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. இதில் திலீபன் மருத்துவ நிலையங்களான மாங்குளத்தில் 19911பேரிற்கும், ஐயன்குளத்தில் 14624பேரிற்கும், கற்சிலைமடுவில் 54631 பேரிற்கும், வளம்பிலில் 16278பேரிற்கும், பூநகரியல் 16560பேரிற்கும், ஆழியவளையில் 20419பேரிற்கும், நைனாமடுவில் 6932பேரிற்கும், கறுக்காய்குளத்தில் 14510பேரிற்கும்,புளியங்குளத்தில் 9188 பேரிற்கும், நெடுந்தீவில் 6594 பேரிற்கும் மொத்தமாக 179,647 பேரிற்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

இதில் வைரஸ்காய்ச்சலினால் 21975 பேரும், சுவாசப்பாதைத் தொற்றினால் 31338 பேரும், குடற் புழுத்தொற்றினால் 13714 பேரும், நாரிக்குத்தினால் 18958 பேரும், காயங்களினால் 14530 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 7800 பேரும், சிறுநீர்வழித் தொற்றினால் 2011 பேரும், தோல்நோயினால் 9918 பேரும், காதுநோய்களினால் 2536 பேரும், கண் நோயினால் 1863 பேரும், வயிற்றோட்டத்தினால் 7960 பேரும், நாய்க்கடியினால் 1127 பேரும்,பாம்புக்கடியினால் 287 பேரும்,உயர்குருதியமுக்கத்தினால் 2573 பேரும்,மகப்பேற்றினால் 18பேரும் உட்பட 179647 பேருக்கு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சிகிச்சையளிக்கப்பட்டது.

அத்துடன் நடமாடும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் 38428 பேருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் தற்காலிக முகாம்கள் அமைத்து அதில் வெளி நோயாளர்களாக 8037 பேரும், கண்பரிசோதனைச்சிகிச்சையினால் 639 பேரும், பற்சிகிச்சையினால் 1373 பேருக்குமாக மொத்தம் 10709 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

(லோ)

---

# முல்லை உ.உ.ஆணையாளருக்கு சேவைநலன் பாராட்டுவிழா

(மல்லாவி)

முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா அவர்களின் சேவை நலன் பாராட்டுவிழா துணுக்காய் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் விசேட ஆணையாளர் விக்டர் ஜெயசிங்கம் தலைமையில் கடந்த சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வினை பாண்டியன குளம் துணுக்காய் பிரதேச சபையினர் இணைந்து நடாத்தினர்.

துணுக்காய் பிரதேசசபை செயலாளர் திருமதி கோமளவள்ளி தமிழ்ச்செல்வன், தொழில் நுட்ப அதிகாரி ச.கணேசலிங்கம், கிராம சேவையாளர் சி.சண்முகநாதன், மாந்தை கிழக்கு வருமான வரி உத்யோகத்தர் வே.ம.இந்திரநாதன், கிராம அபிவிருத்தி தலைவர் அ.பரராசசிங்கம் ஆகியோர் பாராட்டுரை ஆற்றினர். (24)

---

# பாஷையூர் மீன்சந்தைக்கு செல்வோர் மீது கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மீன்சந்தைக்குச் செல்வோர்மீது படையினர் பலவித சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பாஷையூர் பகுதியில் உள்ள இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக மேற்படி சந்தை காணப்படுகிறது. இதனால் மேற்படி பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினரின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே படையினர் இக் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதன்போது இச்சந்தைக்குச் செல்வோர்மீது சோதனை மற்றும் விசாரணைகளை மேற்கொண்ட பின்பே சந்தைக்குள் பிரவேசிக்க அனுமதிப்பதுடன், மொத்தமாக கடலுணவுகளை வியாபாரத்திற்காக வியாபாரிகள் எடுத்துச் செல்லும் போது அவ்உணவுகளை கொட்டிக் கிளறி சேதப்படுத்துவதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக மக்களும் வியாபாரிகளும் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

---

# தூயதமிழ்ப் பெயரை குழந்தைகளுக்குச் சூட்டிய பெற்றோரை கௌரவிக்க யாழ்.இல் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தூய தமிழ்ப்பெயர்களை தமது குழந்தைகளுக்குச் சூட்டியுள்ள பெற்றோர்களும் தமிழ்ப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ள குழந்தைகளும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஈழத்தமிழரது பாரம் பரியத்தையும் தனித்துவத்தையும் பேணிப் பாதுகாத்து தமிழ்மொழியுடன் பிறமொழி நாகரிகங்கள் கலப்பதைத்தடுக்கவும் இவ்உணர்வினை மக்கள் மத்தியில் ஊக்குவிப்பதற்குமாக கனடாவாழ்-ஈழத்தமிழ் மக்கள் ஒன்றியத்தின் "சிலம்பம்" என்ற அமைப்பு இக்கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் முதல் முதலாக இடம்பெறவுள்ள இவ்வாறானதொரு கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

300 ற்கும் மேற்பட்ட குழந்தைகளும் பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ள இந்நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், சமூக அ[illegible]ின் பிரமுகர்கள், அறி[illegible]கள் [illegible]னப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (33)

---

## வெள்ளிவிழா

கொட்டக்கலை அரசினர் ஆசிரியக் கலாசாலையின் வெள்ளி விழாநிகழ்வு நாளை வெகு சிறப்பாக ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவிருக்கின்றது.

இவ்விழாவில் முதலாம் நாளாகிய நாளை சமய நிகழ்வுகளும், அடுத்தநாள் விளையாட்டுப் போட்டியும் நடைபெறவுள்ளன. இறுதிநாளான 8ம் திகதி பரிசளிப்பும் கௌரவிப்பும் நடைபெற்று இறுதியாக கலை நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

---

# கல்லுடைக்கும் ஆலைகளை வாழ்விடங்களில் நிறுவ எ[illegible]ர்ப்பு

(யாழ்ப்பாணம்)

குடிமனைகளுக்கு அண்மையாக கல்லுடைக்கும் ஆலைகளை நிறுவுவது தடுக்கப்பட வேண்டும் எனக் கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பல செய்யப்பட்டுள்ளன.

கல்லுடைக்கும் ஆலைகள் மக்கள் நடமாட்டம் குறைந்த பிரதேசத்தில் மட்டுமே அமைக்கப்படலாம் என சுற்றுச்சூழல் சட்ட விதிமுறை காண[illegible]ப்படுகிறது. ஆனால் யாழ். வட்டத்தில் இதற்கு மாறாக ம[illegible]ர் குடிமனைகளை அண்மித்தே இவ்வாறான ஆலைகள் பல நிறுவப்பட்டுள்ளன.

இதனால் சூழல் கடுமையாக மாசடைவதுடன் மக்களும் கடும் இனம்தெரியாத சுவாச நோய்களுக்கும் ஆளாக வேண்டிய நிலையில் உள்ளனர். (33)

---

*– தியாகி அறக்கொடை நிறுவனத்தால் –*

# பாடசாலை மாணவர்களுக்கு தைத்த சீருடை வழங்கல்

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையினால் விசுவமடு, முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசங்களைச் சேர்ந்த நாற்பது பாடசாலை மாணவர்களுக்கு தைத்த பாடசாலைச் சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகத்தில் இவை வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி தமிழ்நிலா த.பொ. மே. நிறுவனத்தின் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி நர்மதா, த.பொ.மே. நிறுவன முல்லை மாவட்டச் செயலர் சி.அமிர்தலிங்கம், கிராமிய அபிவிருத்தி வங்கி மேலாளர் இ.கமலக்கண்ணன் ஆகியோர் உட்பட பெற்றோர், பாதுகாவலர், மாணவர்கள், நிறுவனப் பணியாளர்கள் கலந்து சிறப்பித்ததாக பொருண்மிய செய்திக் குறிப் பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

---

# ரயில்வே ஊழியர்களின் பணிநிறுத்தம் அரசுடன் இணக்கமின்மையால் தொடர்கிறது!

(கொழும்பு)

சிறிலங்கா ரயில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்படாததை அடுத்து ரயில்வே ஊழியர்களின் பணிநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறு கிறது.

ரயில்வேஅதிகாரசபையில் இணைக்கப் பட்ட பணியாளர்கள் அதிகாரிகளுக்குகீழ் கடமையாற்றுமாறு அரசாங்கம் விடுத்த யோசனை களை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்ததையடுத்து பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்படாதுவிட்டது. அலரிமாளிகையில் நடைபெற்ற இப்பேச்சுக்களின் போது அரச தரப்பில் ராஜித சேனாரத்ன,திலக் மாரப்பன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச தரப்புப் பேச்சாளர் தகவல் தருகையில் வேலை நிறுத்தக்காரர்கள் ரயில்வே அதிகாரசபையுடன் உடன்பாட்டுக்கு வரவில்லை எனவும் தமது யோசனைகளை முற்றுமுழுதாக நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்மாரப்பன கருத்துக் கூறும்போது, அதிகாரசபையுடன் இவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்து தீர்த்துவைக்க அரசு தயாராக விருப்பதாகவும் சகல வகுப்பினருக்கும் 3 சம்பள ஏற்றம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

-சுதந்திரதினத்தை பகிஷ்கரிக்கும் வகையில்-

# கறுப்புக் கொடிகளை கட்டியவேளை தடுத்த படையினருடன் பொதுமக்கள் கைகலப்பு!

**மன்னாரில் சுதந்திரதின கொண்டாட்டத்தைப் புறக்கணிக்கும் முகமாக நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் ஒன்றிணைந்து கறுப்புக் கொடிகளைக் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டவேளை சிறிலங்காப் பொலிசாரும் இராணுவத்தினரும் அதனை தடுத்துள்ளனர்.**

இதனையடுத்து பொதுமக்கள் சிறிலங்காப் பொலிசாருடனும், இராணுவத்தினருடனும் எதிர்த்து கைகலப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து இராணுவத்தினர் விலகிச் சென்றுள்ளனர்.

மக்கள் தொடர்ந்து கறுப்புக் கொடிகளை பேருந்து நிலையத்தில் கட்டிமுடித்தனர்.

இதேவேளை மன்னார் பண்டி தோட்டம் எனும் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கி செல்லவிருந்த பேருந்தை பொதுமக்கள் மறித்து திருப்பி அனுப்பமுற்பட்டபோது சாரதி மீண்டும் மன்னாருக்கு சென்று அங்கிருந்து கொழும்பு செல்ல அப்பேருந்து முற்பட்ட போது அந்தப் பேருந்து பொது மக்களால் தாக்கப்பட்டு அது மீண்டும் திருப்பியனுப்பப்பட்டது.

இதேவேளை நேற்று முன் தினம் இரவு மன்னார் பேருந்து நிலையத்தில் அமர்ந்திருந்தவர்களில் மூன்று பேரை பொலிசார் கைது செய்தனர்.

பின்னர்போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் தலையீட்டையடுத்து அவர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (மி)

# கச்சாய் கடலோரம் தேங்காய் உரிமட்டைகளை ஊற விடுவோர் மீது படையினர் கெடுபிடி!

(யாழ்ப்பாணம்)

கச்சாய் கடலோரங்களில் தேங்காய் உரிமட்டைகளை ஊறவிடச் செல்வோர் மீது படையினர் கடும் கெடுபிடிகளைப் புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மேற்படி கடலோரங்களில் இவ்வாறான தேங்காய் உரிமட்டைகளைப் ஊறவிட படையினர் அனுமதிமறுத்திருந்தனர். இதனால் தாம் கடுமையாகப்பாதிக்கப் படுவதாகச் சுட்டிக்காட்டிய தும்புத் தொழிலாளர்கள் தேங்காய் உரிமட்டைகளை ஊறவிட்டு அதிலிருந்து பெறப்படும் தும்பின் மூலம் தும்புக்கைத்தொழிலை தொடரவாய்ப்பளிக்குமாறு அப்பகுதி தும்புத் தொழிலாளிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவ்வாறு கோரிக்கைகளைத் தொடர்ந்து கடந்த மாதம் 24ஆம் திகதி இக்கடற்பரப்பில் தேங்காய் உரிமட்டைகளை ஊறவிட படையினர் அனுமதி வழங்கினர்.

இதற்கமைய அங்கு மட்டைகளை ஊறவிடச் செல்வோரை தம்மால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பாதையினூடாகவே செல்லலாம் என்றும், தம்மால் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மட்டைகளை மட்டுமே ஊறவிடலாம் என்றும் உத்தரவிட்டுள்ளனர். இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தும்புத்தொழிலாளிகள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

# 2000ஏக்கர் நெற்செய்கை வரட்சியால் அழிந்தது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான், சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் 2000 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை மழை இன்மையால் வாடிப்போயுள்ளது. இதற்கான வரட்சி நிவாரணங்களை பெற்றுக்கொள்ள அப்பகுதிகளிலுள்ள கமத்தொழில் சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகள் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். (மி)

# பேசாலை அகதி முகாமிலிருந்து ஒருதொகுதி குடும்பங்கள் முல்லைத்தீவுக்கு வருகை

(மன்னார்)

பேசாலை அகதி முகாமிலிருந்து 14 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடமான முல்லைத்தீவுக்கு மீளக் குடியமரும் மக்கள் கடந்த 2ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவுமாவட்டத்தின் 06 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பகுதிக்குஇவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் பிரதேச செயலாளர் ஆர்.ரதீஸ்வரன் செய்தார். இவர்கள் 14 வருடங்களின் பின்னர் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

# ஊடகங்கள் மீதான குற்றச்சாட்டுக்கு சனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

சனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையே உத்தியோகபூர்வ குழு மூலம் நடைபெறும் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை தடை செய்வதற்கு அரசஊடகங்கள் திட்டமிட்டு செயற்படுவதாகத் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சின் கட்டுப்பாட்டை தான் கொண்டிருக்க வேண்டுமென பிரதமர் வலியுறுத்தியதனால் இதுபற்றி சனாதிபதியின் ஆக்கபூர்வமான, இணக்கமான பிரேரணை குறித்து உடன்பாடு காணப்படவில்லையென அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பமைச்சு இல்லாமல் சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்ல முடியாதென பிரதமரும் அவரது அரசாங்கமும் தொடர்ந்து கூறிவருவது துரதிர்ஷ்ட வசமானதென அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இரு கிராமங்களிடையே மோதல் சமரசம் செய்யப்பட்டது!

மன்னாரில் கடந்த 2ஆம் திகதி இரு கிராமங்களுக் கிடையே கோஷ்டி மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து இரு கிராமங்களுக்கிடையேயும் சமரசம் செய்து வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட ஆயர் ஜோசப் தலைமையில், வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் பந்துல, மன்னார் பொலிஸ் அதிபர் சாந்தகொட பொலிஸ் அதிகாரி ஆகியோர் அழைக்கப்பட்டு மன் னார் ஜெபஆலயத்தில்சமாதானமுயற்சிமேற்கொள்ளப்பட்டது. (மி)


## சிவா வர்த்தக நிலையம்

SIVA TRADING CO

எமது நிலையம் மீண்டும் பழைய முகவரியில்
இல.23, கண்டிவீதி,
கிளிநொச்சி.

பல்பொருள் வர்த்தகம் - ஆரம்பம்:- 5.2.2004 (வியாழன்) நேரம் காலை 09.30-10.30
வாடிக்கையாளர்கள் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து வாடிக்கையாளர்கள், பொதுமக்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

த.தங்கராசா
உரிமையாளர்.

(4213)

## புதுக்கடைத்திறப்பு விழா

## வேணில் நகைமாடம்

தருமபுரம் வேணில் நகைத்தொழிலகம் வேணில் அடைவு பிடிக்கும் நிலையத்திற்குஅருகாமையில் வேணில் நகைமாடம் 05.02.04 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர், வாடிக்கையாளர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
உரிமையாளர்,
வி.கிருஸ்ணபிள்ளை.

(4207)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் திருமதி குருநாதர் பொன்னுப்பிள்ளை

2004.01.06ஆம் நாள் இல. 15 சிவபுரம் வவுனிக்குளத்தில் காலமாகிய அமரர் திருமதி குருநாதர் பொன்னுப்பிள்ளை (துணுக்காய் GTZ இணைப்பாளர் திரு.கு.சிவலிங்கத்தின் தாயார்) அவர்களது 31.ஆம் நாள் நினைவு நாளில், நாமும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

செயற்திட்ட முகாமையாளர்,
திட்ட அலுவலர்கள்,
இணைப்பாளர்கள்.
GTZ/BESP/VERP

(4203)

## 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 04 - 01 - 1954



இறப்பு 07 - 01 - 2004

### அமரர் சுந்தரம் மயில்வாகனம்

[முன்னாள் தேநீர்க்கடை உரிமையாளர்]

வட்டுவாகல், முல்லைத்தீவு.

06.02.2004 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிகிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(3978)



சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-02-2004

## பாராளுமன்றம் கலைப்பு?

இன்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் கேட்கப்படும் முக்கிய கேள்வி சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தை எப்பொழுது கலைப்பார் என்பதே ஆகும். அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாக முடிவு செய்து விட்டார். எப்பொழுது பாராளுமன்றத்தைக் கலைப்பார் என்பதே உறுதி செய்யப்படாத விடயமாக உள்ளது என்பதே அவர்களது வினா.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என ஏற்கனவே உறுதி கூறியிருப்பினும் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்ற எதிர்பார்க்கை அனைவர் மத்தியிலும் இருக்கவே செய்தது. இதற்கு ஏற்றாற் போல் சனாதிபதி தரப்பில் இருந்து சிலர் பொதுத்தேர்தல் பற்றிப் பேசியும் வருகின்றனர்.

ஆனால், பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படலாம். அதாவது இன்றோ நாளையோ அன்றி ஒரு வார காலப் பகுதிக்குள்ளோ பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற அறிவிப்புக்கள் வெளிவரலாம். ஆனால் இவை எவையும் உத்தியோக பூர்வ அறிவிப்புக்களாக இல்லை.

ஆனால் அறிவிப்புக்கள் உத்தியோக பூர்வமானவையாகவோ அன்றி உத்தியோகப் பற்றற்றவையாகவோ அன்றி வேறு எதுவாக இருப்பினும் சரி பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படுவதென்பது பெரும்பாலும் ஊர்ஜிதமான்தொன்றாகவே உள்ளது. ஐ.தே.முன்னணி அரசாங்கம் இதனைவிரும்பாது விட்டாலும், பாராளுமன்றக் கலைப்பைத் தடுப்பது கடினமாகவே இருக்கும்.

பாராளுமன்றக் கலைப்பு தொடர்பாக சனாதிபதி சந்திரிகா எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருப்பினும் கலைப்பு என்பதைக் கைவிட அவரால் முடியாது. ஏனெனில் தற்போது அவர் போடமுனையும் அரசியல் அடித்தளமே பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். அதாவது ஜே.வி.பி.க்கும் – சு.கட்சிக்கும் இடையிலான கூட்டணியானது பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் நோக்கில் அமைக்கப்பட்டதேயாகும்

ஆகையினால் சனாதிபதி சந்திரிகாபொதுத்தேர்தலில் இருந்து பின்வாங்குவாரேயானால் சு.கட்சிக்கும்–ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்பாடே கேள்விக்குள்ளானதாகிவிடும். அதற்கு அப்பால் அது முறிவடைந்தால் கூட ஆச்சரியத்திற்குரிய தல்ல.ஆகையினால், சந்திரிகா குமாரதுங்க தனக்கு இஷ்டம் இல்லாது போனாலும் கூட பாராளுமன்றத்தைக் கலைத்தல் என்பது நிர்ப்பந்தத்தின் பாற்பட்ட தொன்றாகவே அவருக்கு இருக்கும்.

தற்போதைய சூழ் நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதினால் சுதந்திரக்கட்சிக்குப் பயன் என்ன என்ற கேள்வி பலமாகவே உள்ளது. ஏனெனில் சிறிலங்கா சு.கட்சி பொதுத் தேர்தல் ஒன்றில் போட்டியிடுமானால் தற்போதைய நிலையை விட மேம்பட்டதொரு நிலை ஒன்றை அதனால் அடைய முடியுமா? என்பது குறித்துப் பலத்த சந்தேகம் உள்ளது. ஏனெனில் தற்போதைய சூழ்நிலையில் சு.கட்சியின் வாக்கு வங்கி பலப்படுவதற்கான எந்தவித வாய்ப்புக்களும் இருப்பதாக இல்லை. மாறாகப் பலவீனப்பட்டுள்ள தாகவே அது உள்ளது.

இந்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பெரும் அனுகூலமானதாக இருக்கப்போவதில்லை. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் கூட்டல் கழித்தல் அடிப்படையிலேயே ஐ.தே.கட்சியை விட கூட்டணி அதிக வாக்குகளைப் பெறலாம் என்ற கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால், ஜே.வி.பி. பல அனுகூலங்களைப் பெறலாம் என்றும் அதன் பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளமை ஒரு வகையில் சரியானதாகவே இருக்க வாய்ப்புண்டு. அவ்வாறு அதிகரிக்குமானால் ஜே.வி.பி.யின் நிபந்தனைகள் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆகையினால், பயனற்றதொரு நடவடிக்கையில் ஈடுபடுவதாகவே பொதுத் தேர்தல் என்பது சு.கட்சிக்கு இருக்க முடியும். அவ்வாறிருந்தும் இத்தகையதொரு நடவடிக்கை மேற்கொள்வது என்பது அற நனைந்தவனுக்குக் கூதல் என்ன குளிர் என்ன என்பது போன்றதேயாகும். அதாவது சனாதிபதி சந்திரிகா நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுள்ளாரோ அன்றி முழு விருப்பின் அடிப்படையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றாரோ எதுவாகிலும் அவர் நாட்டையோ அன்றி தனது கட்சியையோ திறம்பட வழிநடத்திச் செல்வதாகக் கொள்ள முடியாது.

அது மாத்திரமல்ல, நியாயபூர்வமான காரணம் இன்றிப் பாராளுமன்றம் கலைக்கப்படுமானால் சந்திரிகா சனாதிபதியாகப் பதவி வகிக்கப் போகும் மிகுதிக் காலப் பகுதியானது சிறிலங்கா அரசியலில் எத்தகைய மாற்றங்களும் நிகழக்கூடியக் காலப்பகுதியாகவே இருக்கும். அதாவது, தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க சனாதிபதி சந்திரிகா எத்தகைய நடவடிக்கைகளுக்கும் தயாராகவே இருப்பார். இவை அரசியல் யாப்பிற்கு மாறானவையாகவும், சனநாயகத்தைக் கேலிக்கிடமாக்கும் நடவடிக்கையாகவும் கூட இருக்கலாம்.

# சமாதானம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எப்படிக் காண்பது

## -பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேள்வி

சமாதானம் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த வகையில் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வினை எப்படிக் காண்பது? யுத்தநிறுத்தம் தென்பகுதி மக்களுக்குத்தான் நன்மைகளையும் பயனையும் அளித்துள்ளதேயொழிய வடக்கு-கிழக்கு மக்களுக்கு அல்ல.

என யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் கூறியுள்ளார்.

இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் கடந்த காலங்களில் எத்தனையோ வரைவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் எதுவுமே அரசுகளின் கவனத்தில் கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு வரைவும் தூக்கி வீசப்பட்ட வரலாறுகள் தான் மிஞ்சியது. இனியும் இந்த நாட்டில் அப்படியான நிலை ஏற்படப் போவதில்லை.

தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளைத் தென்பகுதி மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்திருந்த போதிலும் கூட தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரவில்லை.

சிறைச்சாலைகளில் வாடுகின்ற ஆயிரக்கணக்கான தமிழர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட மக்கள் அங்கு மீளவும் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் அவல வாழ்வு இன்னமும் முடியவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அரசியலமைப்பு விவகார அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளிடம் சிற்றம்பலம் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

# கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

## -சனாதிபதிக்கு கடிதமூலம் அழுத்தம்

(கொழும்பு)

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த சனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கத்தோலிக்க இளைஞர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு கடந்த முதலாம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரிலேயே இடம் பெறுகின்றன. அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பாதுகாப்பு அமைச்சு உங்களிடம் இருக்கின்றது நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து எமது தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும். சில தேவாலயங்கள் மீது தாக்குதல் இடம் பெற்ற போது பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுத்தும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. தாக்குதல் நடத்தியவர்களை மக்கள் சிலர் இனம் காட்டியும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே நீங்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். மதங்களிடையேயான ஒற்றுமைக்கு வழி சமைக்கவேண்டும். எமது இளைஞர்கள் ஆத்திரமடைந்து பதில் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கினால் விளைவு விபரீதமாகவே இருக்கும்.

ஆகவேதான் அவ்வாறான வன்முறைகள் தொடர்வதற்கு இடமளிக்கக் கூடாது. அதனை நாங்கள் விரும்பவில்லை நாகரிகமான முறையில் நடந்து கொள்ளவே விரும்புகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கணவர் இறந்ததாகக் கூறி ரூ.88லட்சத்தை இழப்பீடாக பெற்ற இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

கணவர் இறந்து விட்டதாகக் கூறி மூன்று காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து மோசடியாக ரூபா 88 லட்சம் பெற்றதாக சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கைத் தமிழ் பெண் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கைப் பெண்ணொருவர் தனது கணவர் இறந்து விட்டதாகக் கூறி காப்புறுதி நிறுவனத்திடமிருந்து காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளார்.

இதற்கு அவரது தாயார் மற்றும் கணவனின் சகோதரரும் உடந்தையாக இருந்துள்ளார்கள். இதற்கிடையே இறந்ததாக கூறப்பட்ட நபரை கொழும்பு நகரில் உயிரோடு பார்த்ததாக சிலர் கூறியதை தொடர்ந்து குட்டு அம்பலமாகியுள்ளது.

இந்த வழக்கில் குற்றச் சாட்டு நிரூபிக்கப்பட்டால், மேற்படி பெண்ணுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

# சமாதானத்தை முறியடிக்க முயலும் சக்தி குறித்து மகாநாமதேரர் கவலை

(கொழும்பு)

இரு தசாப்தங்களாக இந்நாட்டில் நடைபெற்ற யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி மக்கள் நிம்மதியாக இருக்கும் நிலை தோன்றியுள்ள இவ்வேளையில் அந்த சமாதானத்தை முறியடிக்க ஒரு சக்தி பின்னணி வகிப்பதை நினைக்கும் போது வேதனையளிக்கின்றது எனசிறிலங்காவின் 56 ஆவது சுதந்திரதின வைபவம் தொடர்பான மத வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய வேவல்தெனிய ராமன்ய நிகாயவின் மகாநாம தேரர் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அவர் மேலும் கூறுகையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆட்சியேற்ற பின்னர் இளைஞர்களின் உயிர் பாதுகாக்கப்படுகின்றது எனக்கூறிய அவர் சகல இனத்தவரும் அச்சமின்றி வாழமுடியும், யுத்தத்தில் வருடத்துக்கு செலவாகும் பெருந்தொகைப்பணம் வேறு நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்த முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளரர்.

மேலும் அவர் கூறும் போது பிரதமர் இந்தத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் எல்லோரினதும் இன,மொழி, மதம் ஆகியவற்றின் பெறுமதியை கருத்திற் கொண்டு நடவடிக்கையிலீடுபடுமாறும் கேட்டுக் கொண்டார்.

# நான்கு விக்கெட்டுகளால் வெற்றி

போர்த் நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற வீபி கிண்ணத்துக்கான கடைசி லீக் போட்டியில் இந்திய அணி சிம்பாப்வே அணியை நாலு விக்கெட்டுகளால் வென்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணியின் மட்சிக் கென்யனறி மட்டுமே சிறப்பாக ஆடி ஆகக்கூடுதலாக 37 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்காடிய இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 136 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணியின் சார்பில் நாலு விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் வீரர் இர்பான் பதன் சிறப்பாட்டக்காரராக அறிவிக்கப்பட்டார்.

இத்தொடரின் முதலாவது இறுதியாட்டத்தில் அவுஸ்ரேலிய, இந்திய அணிகள் நாளை மெல்பேனில் மோதும்.

## பங்கேற்க விருப்பம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் நயன்மொங்கியா மீண்டும் அணியில் இடம்பெற முடியும் என கூறியுள்ளார். ஆட்டநிர்ணய சூதாட்ட குற்றச்சாட்டுக்குள்ளான இவர் 2000ஆம் ஆண்டு முதல் போட்டிகளில் கலந்துகொள்ள தடைவிதிக்கப்பட்டிருந்தார்.

தன்னை ஒதுக்கி வைத்திருப்பதற்கு இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதைக் காரணம் கூறினாலும் சிறப்பாக விளையாட முடியாத அளவிற்கு தான் வயது கூடிவிடவில்லை எனவும் இவர் தெரிவித்துள்ளார்.



# தேர்தலை உடன் நடத்த சு.கட்சியிடம் நிதியில்லை தேடிக்கொள்ள இருமாதங்கள் தேவை

## சனாதிபதி சந்திரிகா மத்திய குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(கொழும்பு) -

பொதுத்தேர்தலுக்கு செல்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் நிதி வளம் இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்களன்று நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் மேற்படி தகவல் வெளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி இந்தத் தகவலை உறுப்பினர்களிடையே தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சிக்கு வர்த்தக சமூகம் நிதியுதவியை வழங்க தயாராக வுள்ளபோதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 'அவ்வாறான உதவி யில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே இந்த நிதியைத் தேடிக் கொள்வதற்கு குறைந்தது இரண்டு மாதமாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தேவை என்று சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற வர்களில் பெரும்பாலானோர் உடனடியாகப்பொதுத்தேர்தல் ஒன்றிற்கு பொ.ஐ.முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் செல்ல வேண்டும் என வலியுறுத்திய போதும கூட்டத்திற்கு தலைமைதாங்கிய சனாதிபதி உரிய பதில் எதனையும் வழங்கவில்லை.

இது இவ்வாறிருக்க சனாதிபதி இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 167தொகுதி அமைப்பாளர்களையும் சந்திப்பதற்காக அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது பொதுத் தேர்தல் தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படவுள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் 7ம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளபோதும் அதனை சனாதிபதியின் தரப்போ அல்லது பொ.ஐ.முன்னணியின் தரப்போ இது வரையும் உறுதிப்படுத்தவில்லை.

# தப்பியோடிய படையினருக்கு சேவையில் இணைய வாய்ப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய படையினரை மீண்டும் சேவையில் இணைக்கக் கூடிய வாய்ப்பினை வழங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி 2003ஆம் ஆண்டு சனவரி மாதம் 8ஆம் திகதியோடு இராணுவத்திலிருந்து தப்பியோடி மூன்று வருடங்கள் நிறைவடைந்த படையினருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஆரம்ப இராணுவப் பயிற்சி பெற்று சேவையிலிருந்து தப்பிச் சென்ற பயிலுநர்களுக்கு சட்ட ரீதியாக விலக வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி சேவையிலிருந்து சட்ட ரீதியாக விலக விரும்புகின்ற படையினர் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை களுத்துறை மாவட்ட செயலகத்தில் தங்களது சட்ட ரீதியான விலகல்களை மேற்கொள்ளலாம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாஷிங்டனில் புஷ்ஷின் விருந்திற்கு இலங்கையிலிருந்து பிரமுகர்கள் அழைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபரால் வருடாந்தம் நடத்தப்படும் காலை உணவின் பின்னரான கூட்டத்திற்கு இலங்கையிலிருந்தும் முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபரால் நடத்தப்படும் இக் கூட்டம் இன்று வாஷிங்டனில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சகல நாடுகளில் இருந்தும் அரசியல்வாதிகள் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் மதத்தலைவர்கள் போன்றோர்களுக்கு அழைப்பு விடுப்பது வழமையாகும். இந்த வகையில் இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களில் நீதியரசர் சிரானி திலக்கவர்தன காணாமல் போன படையினரின் சங்கத் தலைவர் டுர்கிமார்டின் ஸ்ரைன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் கல்வி மனிதவள அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரா பிரியதர்சனயாப்பா, சுசில் பிரேமஜயந்த, சுகாதார அமைச்சர் தயாரத்ன, சனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளர் ஹரிம்பீரிஸ், சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மற்றும் கோரேல் கம்பனித் தலைவரான ஷநீக்மரிக்கார், அவரது மனைவியும், கென்ய கம்பனி ஒன்றின் பணிப்பாளருமான நீலாமரிக்கார், பார்ட்லிட் கம்பனி பணிப்பாளரானசுனில் விஜேயசிங்கவும் அவரது மனைவியும் அடங்குகின்றனர்.

# சோதிடம் பார்த்து தேர்தல் வைப்பதால் நாட்டுமக்களுக்கு பயனேதுமில்லை

## சிறி.பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் சாடல்

(கொழும்பு)

சுபநேரம் பார்த்து ஜோதிடர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் அவரவர் சுயவிருப்பங்களுக்கமைய தேர்தல்களை நடத்துவதனால் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாதென பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட வேளை விவாதத்தில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.கொழும்பு பெப்ரவரி 4 சுதந்திரதினம் முடிந்ததும், அநேகமாக இன்று அல்லது நாளை மறுதினம் சனிக்கிழமை நாடாளுமன்றம் கலைக்கப்படும். நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் இவ்வாறு பரபரப்பான செய்திகள் வெளியாகின. நாடாளுமன்றத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்பொழுது திடீரென கலைப்பதற்கு வாய்ப்புள்ள இந்த சூழ்நிலையில் சனாதிபதியை அதைச் செய்யவிடாது தடுக்கும் மாற்றுவழிஅரசு தரப்புக்கு உண்டு எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# பத்திரிகை விற்பனையைத் தடுக்கமுற்பட்ட படையினர்-மக்களுக்கிடையில் முறுகல்

## -படையினர் அகன்றதும் விற்பனை சுமுகமானது

(யாழ்ப்பாணம்)

ஈழநாதம் பத்திரிகை விற்பனை செய்யக்கூடாது என படையினர் தடுத்ததால் மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று முறுகல் நிலை யாழ்குடாநாட்டில் ஏற்பட்டது.

நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது. ஈழநாதம் வாரஇதழ்களை விற்பனை செய்வதற்காக மேற்படி பகுதிக்குச்சென்ற. இருபத்திரிகை விநியோகஸ்தர்களை வழிமறித்த படையினர் பத்திரிகைகளை பறிமுதல்செய்ய முற்பட்டதுடன் விற்பனை செய்யக்கூடாது எனவும் அச்சுறுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் சூழ்ந்த மக்கள் படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் அப்பகுதியில் விற்பனை செய்யுமாறு வலியுறுத்தியதுடன் இப்பத்திரிகையை விற்பனை செய்வதற்கு யாரும் தடைவிதிக்க முடியாது எனக் கூறியதுடன் அப்பகுதியில் வைத்தே மக்கள் பத்திரிகைகளை வேண்டிச்சென்றுள்ளனர். இதனால் படையினர் அப்பகுதியை விட்டு விலகிச்சென்றுள்ளனர்.(33)

# தமது வீடுகளை விட்டகலுமாறு கோரிய மக்கள் மீது பொலிசார் தாக்குதல்

## – ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை அடித்துவிரட்டும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டனர்.

கொழும்புத்துறைப்பகுதியில் இராணுவ பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கிவைக்கப்பட்டுள்ள தமது குடிமனைகளில் இருந்து படையினர் விலகி மீண்டும் மீளக் குடியமர்வதற்கு வழிவகுக்குமாறு கோரியே மேற்படி போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அடித்து விரட்டப்பட்ட மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (33)

### சொந்த...

விஜயம் செய்து பிரதேச செயலரை கொடியேற்றும் நிகழ்வை முன்னெடுக்குமாறு நிர்ப்பந்தித்தனர். எனினும் பிரதேச செயலரை உட்செல்ல அனுமதி மறுத்த பொதுமக்கள் கறுப்புக்கொடிகளை பிரதேச செயலக வளவினுள் ஏற்றுவதாயின் உட்செல்ல அனுமதிப்பதாக அறிவித்தனர். அத்துடன் போராட்டதில் ஈடுபட்ட மக்கள் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்துமிருந்தனர்.

இதேவேளை இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பத்துப் பேர் நேற்று முதல் குறித்த பிரதேச செயலகம் முன்பாக தமது கோரிக்கைகளை வலியுறுத்தி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே தென்மராட்சி தெற்கின் மறவன்புலோ, தனங்கிளப்பு மற்றும் கைதடி நாவற்குழி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி தென்மராட்சி நலன்சேவை சங்கங்களஏற்பாட்டில் மறியல் போராட்டமும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 8.30 மணியளவில் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக குவிந்த நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கொடியேற்றல் நிகழ்வை தடுத்து நிறுத்தியதுடன் மறியலிலும் ஈடுபட்டனர்.

மறவன்புலோவைச் சேர்ந்த பொதுமகனான செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் வயது(46) என்பவரது தலைமையில் ஆரம்பமான சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டத்திற்கு ஆதரவாக தானும் அவருடன் இணைந்து சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக முதியவரான விநாசித்தம்பி கந்தையா என்பவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தென்மராட்சி தெற்கில மக்களை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள தனக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் தெரிவித்துள்ளார்.

ஈழநாதத்திற்கு அளித்த செவ்வியொன்றில் நேற்று முன்தினம் தனது வீட்டிற்கு வந்த சாவகச்சேரி பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் தமது குடும்பத்தவர்களை அச்சுறுத்தியுள்ளதாகவும் அத்துடன் தனக்கும் கொலைப்பயமுறுத்தலை விடுத்ததாகவும் தெரிவித்தார்.

இதனால் பாதுகாப்பு கருதி நேற்று முன்தினமிரவு நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளிலும் கோயில்களிலும் ஒளிந்திருந்ததாகத் தெரிவித்த அவர் இவ் உண்ணா விரதப்போராட்டத்திற்கு மீசாலையிலுள்ள ஆலயமொன்றில் தங்கியிருந்து வந்ததாகவும் தெரிவித்தார்.

### நேற்று...

எங்கும் போக்குவரத்துக்கள் மற்றும் இதர செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்து மக்கள் சோக தினத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்த போது, மேற்படி சேவையில் ஈடுபட முயற்சித்த பேருந்தை வழிமறித்த இளைஞர் குழுவொன்று திடீர் தாக்குதலை நடத்தியதுடன் சாரதியையும் தாக்கியுள்ளது. (33)

### பாதுகாப்பு...

விசேட பிரதிநிதி யசூசி அகாஷி இலங்கை வந்திருந்தபோதும் இதே மாதிரியான யோசனை ஒன்றையே இருவரும் தெரிவித்திருந்தனர். (32)

### யாழ்...

மக்கள் தெரிவிக் கின்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக யுவதியின் பெற்றோர் யாழ். பொலிஸ நிலையத்திலும் கலாச் சாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிற்கும் புகார் தெரிவித்துள்ளனர்.

### சிங்கக்...

தையும் கொண்டு சென்றுள்ளனர்.

படையினரால் கைது செய்யப்பட்ட தனது கணவனையும், அவரது வாகனத்தையும் மீட்டுத் தருமாறு கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்புத்துறை பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி அன்ரன் என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (33)

### பாதுகாவலர்...

ளனர். இதற்கு மக்கள் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து இம் முயற்சியைப் படையினர் கைவிட்டனர். எனினும், நேற்று முன் தினம் இரவு தன்னை பலவந்த மாக வாகனத்தில் ஏற்றிச் சென்ற படையினர் மேற்படி போராட்டத்தினை நடத்த வேண்டாம் என்றும் அதனை கைவிடுமாறு கோரி மிரட்டியதாகவும் காணாமற்போனோர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (33)

### சிறிலங்காவின்...

பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதனைவிட வலி வடக்கு மக்கள் 12 பேரும், தென்மராட்சி தெற்கு பகுதியைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் 13 பேர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையும் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அத்துடன் மீளக் குடியேறக் கோரி ஆங்காங்கே போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. அதைவிட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் திட்டமிட்டபடி கையெழுத்துப் போராட்டம் ஒன்றையும் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இதேவேளை சிறிலங்காவின் சுதந்திரதினமான நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் வேண்டுகோளிற்கிணங்க சகல பிரதேசங்களிலுமுள்ள வர்த்தகநிலையங்களில் கறுப்புக் கொடி பறக்க விடப்பட்டதுடன் மக்கள் கறுப்புப்பட்டியணிந்து நடமாடியதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

மற்றும் முக்கிய அலுவல்கள் காரணமாக வவுனியாவிற்குச் சென்ற பொதுமக்கள் புளியங்குளம் சோதனைச் சாவடிக்கு அப்பால் வைத்து துக்க தினம் அனுஷ்டித்த பொது அமைப்புத் தொண்டர்களால் பயணத்தினைத தொடரவிடாது தடுத்து திருப்பியனுப்பப்பட்டனர்.

மன்னார் நகர வீதிகள் எங்கும் ரயர்கள் கொழுத்தப்பட்டு தமது எதிர்ப்பை மக்கள் காண்பித்துள்ளனர்.

நகர் முழுவதும் படையினரும், ஆயுதம் தாங்கிய பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தார்கள்.

நேற்றுக்காலை முழுப்பாதுகாப்புடன் அரச திணைக்களங்களில் ஏற்றப்பட்டிருந்த சிறிலங்காவின் தேசிய கொடிகள் இனம் தெரியாதோரால் கிழிறக்கப்பட்டது. மன்னார், அரச செயலகம், நகர மண்டபம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, உதவி அரசாங்க அதிபர், விவசாயத் திணைக்களம், ஆகியவற்றில் ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடிகள் மற்றும் நேற்று முன்தினம் மன்னார் பாலத்தடியிலிருந்து தள்ளாடி வீதி வரை கட்டப்பட்டிருந்த சிறிலங்காவின் தேசியக்கொடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

அதேபோல் நகரத்தில் கடந்த 2ஆம் திகதி கட்டப்பட்ட தேசியக் கொடி களும் இனம் தெரியாதவர்களால் அகற்றப்பட்டது.மன்னார் பஸ் நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. எந்தவித வாகனங்களும் ஓடவில்லை. மன்னார் நகரம் வெறிச்சோடியிருந்தது. பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பொது மக்கள் பயமின்றி சுதந்திரதினத்தை புறக்கணித்துள்ளனர். (33,சோ,27,மி)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.